## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

**அ.சா. 6 (LW 11 )**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சிபு | **தொழில்** | |
| **த/ பெயர்** | புரூஸ்கட்டா | **மதம்** | |
| **கிராமம்** | **மேற்கு வங்காளம்,** | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **12.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் பி.அரவிந்தன் முன்பு விசாரணை நடத்தப்பட்டது . விசாரணை மொழி பெயர்த்து எதிரிகளுக்கு ஹிந்தி மொழியில் விளக்கி சொல்லப்பட்டது. )**

1வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மூனான்டிபட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ள கல்கத்தா ஆகும். எனக்கு தமிழ் நன்றாக பேச தெரியும். கல்கத்தாவிலிருந்து நான் தமிழ்நாட்டுக்கு வந்து 25 வருடங்கள் இருக்கும். தற்போது நான் மூனான்டிபட்டியில் வீட்டில் இருந்து வருகிறேன். நான் பெட்டிக்கடை கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு மூனான்டிபட்டி ஊருக்குள் எனது வீட்டிலே வைத்திருந்தேன். மேற்படி கடையில் சோப்பு, முட்டை , பீடி, சிகரெட். போன்ற பொருட்கள் விற்பனை செய்து வந்தேன். கடந்த 3 , 3 1/2 வருடத்திற்கு முன்பு வடமதுரை போலிசார் எனது வீட்டிற்கு வந்து என்னை அழைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்ததற்கு முந்தைய நாள் என் கடை முன்பு 3 பேர் சண்டை போட்டவர்களை பற்றி கேட்டார்கள். அந்த மூன்று பேர்கள் 1. வழக்கில் இறந்து போன ராம்குமார், மீதி இருவர் ஆஜர் எதிரிகள் ஆவார்கள். ஆஜர் எதிரிகள் பெயர் என்கது தெரியாது. ஆஜர் எதிரிகளை மட்டும் தெரியும். பின்பு என்னை போலிசார் வடமதுரைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். அப்போது வடமதுரை செல்லும் வழியில் இபி ஆபிஸ் அருகே ஆஜர் எதிரிகள் இருவரும் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது நான் போலிசாரிடம் முந்தைய நாள் ராம்குமாருடன் சண்டை போட்டவர்கள் தான் ஆஜர் எதிரிகள் என சொன்னேன். முந்தைய நாள் எனது கடைமுன்பு மூன்று பேரும் சண்டை போடும் போது ஆஜர் எதிரிகள் ராம்குமார் தங்களிடம் சண்டை

போடுவதாக சொன்னார். 3 பேரையும் சத்தம் போட்டு அனுப்பி விட்டேன். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரையும் கம்பெனிக்கு போகச் சொல்லி அனுப்பி விட்டேன். பின்பு 1 நாள் கழித்து காவேரி மில் பின்பக்கம் ராம்குமாரின் பாடி கிடந்தது என்று நான் கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,2 மறுவிசாரணை இல்லை.</u>**

மூனான்டிபட்டியில் என் வீடு ஊருக்குள் உள்ளது. எனது வீடு பஸ்ஸ்டாப்பிலிருந்து 100 மீட்டர் தூரம் உள்ளது. ஆஜர் எதிரிகள் அவர்களுக்குள் என்ன பேசிக் கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் அவர் கம்பெனிக்கு சென்றவுடன் ராம்குமார் கிளம்பி சென்று விட்டார். ராம்குமார் உள்ளூர்வாசி இல்லை . நான் சண்டையை விலக்கி விட்ட நபர்கள் எதிரிகள மற்றும் ராம்குமாரை தவிர வேறு யாரும் அங்கு இல்லை. அப்போது ராம்குமார் மது அருந்தியிருந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர்கள் 3 பேரும் எங்கிருந்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மறு நாள் காவேரி மில் அருகே ராம்குமார் பிணம் கிடப்பதாக போலிசார் சொல்லிதான் தெரியும். மூனான்டிபட்டிக்கு வந்த போலிசார் சண்டைநடந்ததாக சொல்லும் மறுநாள்தான் என்னிடம் ஆஜர் எதிரிகளை பற்றி கேட்டுச் சென்றனர். மறுநாள் போலிசார் காரில் வந்து என்னிடம் விவரங்கள் கேட்டார்கள். காலை 09.00மணிக்கு வந்து என்னிடம் விவரம் கேட்டார்கள். எதிரிகளின் பெயர், விவரங்கள் எனக்கு தெரியாது. ராம்குமார் என்பவர் பற்றிய விவரங்கள் பற்றி தெரியாது. ராம்குமார் பற்றிய விவரமும், எதிரிகள் பற்றிய விவரமும போலிசார் சொல்லிதான் எனக்கு தெரியும். நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்கள் அனைத்தும் போலிசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் போலிசார் சொல்லியதன் பேரில் கடைமுன்பாக 3 பேரும் சண்டை போட்டுக் கொண்டார்கள் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வடமதுரை போலிசார் எதிரிகளை நான் அடையாளம் காட்டும் போது எதிரிகள் என்ன உடை அணிந்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. இபி ஆபிஸ் ரோட்டிற்கு முன்பாக பஸ்ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தார்கள். சண்டை நடந்த மறுநாள் தான் காலை 10.00மணிக்கு போலிசார் என்னை அழைத்துச் சென்று அப்போது நான் எதிரிகளை அடையாளம் காட்டினேன். அப்போது எதிரிகளை ஜீப்பில் வந்த போலிசார் அழைத்து சென்றார்கள். நான் போலிசாருக்கு பயந்து கடைக்கு முன்பாக சண்டை நடந்ததாக போலிசாரிடம் எதிரிகளை அடையாளம் காட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:17:05 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.